செ.வெ.எண் :04/பிப்ரவரி நாள்:03.02.2020

# இராமநாதபுரம் மாவட்டத்தில் கரோனா வைரஸ் பாதிப்பு இல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கொரோனா வைரஸ் காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அரசுத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (03.02.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் என்பது மனிதர்களுக்கு சளி, இருமல், காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய வைரஸ் கிருமியாகும். சீனாவின் வூகான் நகரத்தில் இவ்வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. காய்ச்சல், இருமல் மற்றும் சளி, உடல்சோர்வு, ஒருசிலருக்கு மூச்சுத்திணறல் போன்றவை இந்நோயின் அறிகுறிகளாகும். இவ்வைரஸ் கிருமி நோய் அறிகுறிகள் கண்ட நபர் இருமும் போதும், தும்மும் போதும் வெளிப்படும் நீர்த்திவலைகள் மூலம் நேரடியாக பரவுகிறது.

தினமும் 10 முதல் 15 முறை கைகளை சோப்பு போட்டு நன்கு சுத்தமாக கழுவுதல், இருமல் மற்றும் தும்மல் ஏற்படும்போது வாய் மற்றும் மூக்கு ஆகியவற்றை கைக்குட்டை கொண்டு மூடுதல் போன்ற எளிய பழக்கங்களின் மூலம் கொரோனா உள்ளிட்ட எந்த விதமான நோய்தொற்றும் பரவாமல் தடுத்திட முடியும். இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு முற்றிலும் இல்லை. இருப்பினும், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். அதன்படி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளிடையே கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முறைகள் குறித்தும், கைகளை சுத்தமாகக் கழுவும் முறைகள் குறித்தும் பொதுசுகாதாரத் துறை மற்றும் பள்ளிக்கல்வித் துறை சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். மேலும், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்களை பொதுமக்கள் அதிக அளவில் கூடுகின்ற இடங்களில் விளம்பர பதாகைகளாக அமைத்திடவும், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்விநியோகித்திடவும், அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் சார்ந்த அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதுதவிர, மாவட்டத்தில் சுற்றுலாப்பயணிகள் அதிகஅளவில் வந்து செல்லக்கூடிய இராமேஸ்வரத்தில் கொரோனா உள்ளிட்ட வைரஸ் தடுப்பு தொடர்பான உதவி மையம் (Help Desk) அமைத்திட சுகாதாரத்துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் பதற்றமடையாமல் அருகிலுள்ள அரசு மருத்துவமனை/அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்களை அணுகி ஆலோசனை பெற்று மருந்து, மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும். இளநீர், கஞ்சி, ஓஆர்எஸ் போன்ற நீர்ச்சத்து மிகுந்த ஆகாரங்களை உட்கொள்வது அவசியமாகும். மேலும், இவ்வைரஸ் பாதிப்பு தொடர்பாக சமூக வலைதளங்களில் பரவும் யூகங்களின் அடிப்படையிலான தகவல்களை முழுமையாக நம்பாமல், மருத்துவமனைகளை அணுகி அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களின் ஆலோசனையின்படி மட்டுமே சிகிச்சை பெற வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் மரு.எம்.அல்லி, சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.பி.குமரகுருபரன், காவல்துறை உதவி கண்காணிப்பாளர் (பயிற்சி) திரு.விவேக்,இ.கா.ப., ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**